

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் திருப்பூண்டி ஊராட்சியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் ஈரப்பதம் குறித்து அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன், அரசு முதன்மை செயலாளர் சத்யபிரதா சாஹு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், வை செல்வராஜ் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, ஒன்றிய கழகச் செயலாளர், ஆ. தாமஸ் ஆல்வா எடிசன், மு.ப.ஞானசேகரன் மற்றும் பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் திண்டல் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து மரக்கன்றுகளை நட்டார். தொடர்ந்து திண்டல் முழு நேர நியாயவிலைக் கடையின் புதிய கட்டிடத்தினை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைப் பொருட்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, கே.இ.பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., வி.செல்வராஜ், செல்லபொன்னி, டி.எஸ்.குமாரசாமி, கோகிலவாணி, கீர்த்தனா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### ரூ.46 கோடியே 46 லட்சத்தில்

# மன்னார்குடியில் பிரமாண்ட புதிய நவீன பேருந்து நிலையம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – டி.ஆர்.பி.ராஜா திறந்துவைத்தனர்!

திருவாரூர், அக்.14-

முதலமைச்சர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, மன்னார்குடி நகராட்சியில், ரூ.46 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டில் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், ச.முரசொலி எம்.பி., சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், அறங்காவலர் குழு தலைவர் கருடா இளவரசன், நகர்மன்றத் தலைவர் மன்னை.த.சோழராஜன், நகரச் செயலாளர் வீரா. கணேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணிதுணை செயலாளர் அழகுதிருராஜா, வர்த்தகர் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

50 பேருந்து நிறுத்தம் தடங்களுடன், உணவகங்கள், கழிவறை வசதி, டிக்கெட் புக்கிங் கவுண்டர், ஏ.டி.டிம். அறை, டைம் கீப்பிங் ஆபிஸ், காவல் துறை அறை, நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம், இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**இந்நிகழ்வில், அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:-**

மன்னார்குடி நகராட்சியில், ரூ.46 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டில் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மக்களோடு மக்களாக எவ்வாறு பணியாற்ற வேண்டுமென முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எங்களை வழி நடத்தியுள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்; அளித்த நிதியாலே தமிழ்நாட்டில் நகராட்சித்துறையின் கீழ் மழைநீர் வடிக்கால் பணிகள், பாதாள சாக்கடை திட்டம், எல்இடி தெருவிளக்கு உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் 22 பணிகள்!**

மன்னார்குடியில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 09 எண்ணிக்கையில் ரூ.9.71 கோடி மதிப்பீட்டிலும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 15 பணிகள் ரூ.1.51 கோடி மதிப்பீட்டிலும், 15-வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் 32 பணிகள் ரூ.4.99 கோடி மதிப்பீட்டிலும், தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் 1 பணிகள் ரூ.70 லட்சம் மதிப்பீட்டிலும், மாநில பேரிடர் மீட்பு நிதி திட்டத்தின் கீழ் 4 பணி ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும், அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.32 லட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்ட ஒருங்கிணைந்த சமையல் கூடம் பொது நிதியின் கீழ் ரூ.23 லட்சம் மதிப்பீட்டிலும், வட்டி நிதி 1 பணி ரூ.0.85 கோடி மதிப்பீட்டிலும், சேமிப்பு மற்றும் வட்டி நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.0.87 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.1.73 கோடி மதிப்பீட்டிலும், எஸ்.எப்.சி பள்ளி இப்புரூமென்ட் கிராண்ட் - இன்போராஸ்டெரக்சர் பணிகள் 8 பணிகள் ரூ.1.69 கோடி மதிப்பீட்டிலும், எஸ்.எப்.சி அரியர் பண்ட் 3 பணிகள் ரூ.0.84 கோடி மதிப்பீட்டிலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் 3.634 கிலோமீட்டர் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் 22 பணிகளும் முடிவுற்றுள்ளது.

மன்னார்குடியில் இன்ப்ராஸ்டராக்சர் மற்றும் அமினிடீஸ் நிதி 1 பணிகள் ரூ.26.76 கோடி மதிப்பீட்டிலும், எஸ்எப்சி இன்சன்டீவ் பண்ட் 4 பணி ரூ.30 கோடியே 49 லட்சம் மதிப்பீட்டிலும், கே.எப்.டபள்யூ பவுண்டீங் அன்டர் எஸ்எப் ஐஎப் டீஎன் ஐஐஐ 1 பணி ரூ.229 கோடி மதிப்பீட்டிலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் 8 பணிகள் ரூ.7.04 கோடி மதிப்பீட்டிலும், 15-வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் 6 பணிகள் ரூ.4.19 கோடி மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 1 பணி ரூ.2.29 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.2.3 கோடி மதிப்பீட்டிலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 1 பணி ரூ.0.15 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்றுவருகிறது.

**ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் அணுகுசாலை – தடுப்புச் சுவர் பணி!**

மேலும், மன்னார்குடியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2025-26 புதுப்பாலம் அருகில் அணுகு சாலை மற்றும் மேற்கு புறத்தில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது.

இந்நகராட்சி பகுதிகளில் சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட்டத்தில் பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பிக்கும் பணி ரூ.12.76 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. பள்ளி மேம்பாட்டு நிதியின் கீழ் நகராட்சிக்குட்பட்ட மன்னை நகர் சுக்கான் குளம் அங்கன்வாடி கட்டடம் கட்டும் பணி ரூ.0.16 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட 74 குளங்களையும் கால்வாய்கள் மூலம் ஒருங்கிணைக்கும் பணி ரூ.155.00 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. ரூ.500 கோடிக்கு மேலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள் என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது:-**

மிகுந்த எதிர்பார்ப்புடன் ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு பிறகு புதுப்பிக்கப்பட்டு மன்னார்குடி மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**முதல்வருக்கு மன்னார்குடி மக்கள் என்றும் கடமைப்பட்டவர்கள்!**

இம்மண்ணிற்கு மேன்மேலும் பெருமை சேர்த்திடும் வகையிலேயே என் பணியினை நான் தொடர்ந்து மேற்கொள்கிறேன். திராவிட நாயகன் இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சராக விளங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பெறுப்பேற்ற நாள் முதல் மன்னார்குடிக்காக வைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி தந்துள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மன்னார்குடி மக்கள் அனைவரும் என்றும் கடமைப் பட்டவர்களே.

என அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில், கும்பகோணம், திருப்பூர், ஈரோடு, எளவனூர், நாகப்பட்டினம் ஆகிய வழித்தட பேருந்துகளை அமைச்சர்கள் கே.என். நேரு, முனைவர். டி.ஆர். பி.ராஜா கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் க.தன்ராஜ், எஸ். எம்.பி. துரைவேலன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ். டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், அவைத்தலைவர் முருகையன், ஜெ.உத்தமன், ராசு. இளங்கோவன், ஷோபா கணேசன், ராணி சேகர், கு.பா.பாபு, வி. கே.எம்.முருகானந்தம், ராஜாராமன், பைங்கநாடு இளையராஜா, நேசக்கரங்கள் கோபாலகிருஷ்ணன், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்த்தக சங்க பிரதிநிதிகள், ஆணையர் சுரேந்திர ஷா உள்ளதட நகராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்,

# 10 பேட்டரி வாகனங்கள் மாநகராட்சிக்கு வழங்கல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, அக். 13 -

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில், 10 பேட்டரி வாகனங்களை, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மாநகராட்சிக்கு வழங்கினார்.

பின்னர், மாட வீதியில் நடைபெறும் தூய்மைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர். கிரிவலப் பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

12.10.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோயில் எதிரில், தூய்மை அருணை சார்பில், 10 பேட்டரி வாகனங்கள் தூய்மை பணிக்காக மாநகராட்சிக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு கொடியசைத்து தொடங்கி வைத்து, பேட்டரி வாகனங்களை மாநகராட்சிக்கு வழங்கினார்.

பின்னர், காலை 8.00 மணிக்கு, வார்டு16, தேரடி வீதியில் நடைபெறும் தூய்மை பணிகளையும், காந்தி சிலை அருகில் வார்டு எண்13 சார்பில் நடைபெறும் தூய்மை பணியையும், வார்டு7 பேகோபுரத் தெருவில் நடைபெறும் தூய்மைப் பணியையும்,

வார்டு14 பேகோபுரத் தெரு சக்தி திரையரங்கம் அருகில் நடைபெறும் தூய்மை பணியையும், பின்னர் வார்டு15, திருவூடல் தெருவில் நடைபெறும் தூய்மை பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், திருமஞ்சன கோபுரத் தெருவில் தூய்மை காவலர்களுடன் தேநீர் அருந்தினார்.

நிகழ்ச்சியில் தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே. கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், இல. குணசேகரன், ஆணையாளர் செல்வபாலாஜி, பொதுப்பணித்துறையின் கோட்டப் பொறியாளர்கள் முரளி, ஞானவேல்,

ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ. எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ. பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை. சுரேஷ், முபாரக், லயன். ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் அருணை வெங்கட், சினம்.பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவரேகாவிஜயராஜ் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், குண்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், மேலபுதுவயல் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, ஆகியோர் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன், அ.கோ.ராஜராஜன், திருமதி.பா.ஜெயசுதா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில், கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி கலந்து கொண்டார். உடன் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### தி.மு.க. மகளிர் அணி

# திருப்பூர் மத்திய மாவட்டம்

## திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளர் நியமனம்!

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர மகளிர் அணி அமைப்பாளராக உள்ள சா. மகேஸ்வரி அவர்களுக்கு பதிலாக திருமதி. **மு. விஜயா** (1, மாரியம்மன் கோவில் வீதி, முருகம்பாளையம், திருப்பூர் 641604.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநகர மகளிர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 11.10.2025

**ஜெ.ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் பி.துறிஞ்சிப்பட்டி,பி.பள்ளிப்பட்டி, பையர்நத்தம் வெங்கடசமுத்திரம் மோளையானூர்,தென்கரை கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு மற்றும் நிலம் இல்லாத அனைத்துச் சமுதாயத்தைச் சேர்ந்த 113 பேர் தங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வேண்டி பாப்பிரெட்டிப்பட்டி திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் வாயிலாக தங்களது கோரிக்கை மனுக்களை அரசு அதிகாரிகளிடம் வழங்கினர், அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து தங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தங்கள் நன்றியினை தெரிவித்தனர். நிகழ்வின் போது ஸ்ரீராமலு, தினேஷ், தர்மசீலன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.